# BSNLஊழியர் சங்கம்
# தமிழ் மாநிலம்

**சுற்றறிக்கை எண்**:86 **தேதி**:-01.08.2018

**நீண்ட காலமாக தேங்கிக் கிடக்கும் ஊழியர் பிரச்சனைகளின் முன்னேற்றம்:-**

அன்புள்ள தோழர்களே,

நீண்ட காலமாக தேங்கிக் கிடக்கும் பிரச்சனைகளான 7100லிருந்து 6550க்கு குறைக்கப்பட்ட Sr.TOAக்களின் ஊதிய விகிதம், E1 ஊதிய விகிதத்தில் ஊழியர்களுக்கு பதவி உயர்வு, விடுபட்ட கேடர்களுக்கு ஒரு ஆண்டு கூடுதல் ஊதிய உயர்வு மற்றும் TT இலாகா தேர்வு எழுதுவதற்கு 10ஆம் வகுப்பு கல்வி தகுதியை தளர்த்துவது உள்ளிட்ட பிரச்சனைகளில் தற்போது நல்லதொரு முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது இந்த பிரச்சனைகள் தொடர்பாக BSNL ஊழியர் சங்கம் 10.07.2018 அன்று ஒரு குறிப்பு கொடுத்து CMD BSNL இடம் ஒரு கடுமையான விவாதம் நடத்தியபோது இந்த பிரச்சனைகளை BSNL CMD அக்கறையுடன் கேட்டதுடன், சாதகமாக முடிவெடுப்பதாகவும் உறுதி அளித்திருந்தார்.

இந்த சந்திப்பின் தொடர்ச்சியாக 31.07.2018 அன்று தோழர் P.அபிமன்யு GS BSNLEU, தோழர் சுவபன் சக்கரவர்த்தி Dy.GS மற்றும் தோழர் S.செல்லப்பா AGS ஆகியோர் திரு சௌரப் தியாகி Sr.GM(Estt) அவர்களை சந்தித்து விவாதித்ததின் விவரம் வருமாறு:-

1. **7100 ஊதிய விகிதத்தில் இருந்து 6550 ஊதிய விகிதத்திற்கு குறைக்கப்பட்ட Sr.TOA பிரச்சனை:-** NEPP திட்டம் அறிமுகப்படுத்தப்பட்ட போது ஏற்கனவே OTBP பதவி உயர்வு பெற்றிருந்த தோழர்கள் NEPP பதவி உயர்வுக்கு விருப்பம் தெரிவித்தனர். இதனையடுத்து அவர்களின் ஊதிய விகிதம் 7100லிருந்து 6550க்கு குறைக்கப்பட்டது. இந்த பிரச்சனையை BSNL ஊழியர் சங்கம் தொடந்து நிர்வாகத்திடம் விவாதித்து வந்தது. சமீப காலம் வரை நிர்வாகம் இந்த கோரிக்கையை ஏற்றுக் கொள்ளவில்லை. 10.07.2018 அன்று CMDயிடம் நடைபெற்ற சந்திப்பிற்கு பின் நிர்வாகம் இந்த பிரச்சனையை தீர்த்து வைக்க முடிவு செய்துள்ளது. 31.07.2018 அன்று நடைபெற்ற சந்திப்பின் போது இந்த பிரச்சனையை NOTIONAL BENEFITஉடன் தீர்வு காண்பதற்கான நடவடிக்கைகளை கார்ப்பரேட் அலுவலகத்தின் ESTABLISHMENT பிரிவு எடுத்து வருவதாக Sr.GM(Estt)தெரிவித்துள்ளார். இதற்கு பின் இந்த முன்மொழிவு நிர்வாகக் குழு மற்றும் இயக்குனர் குழுவிற்கு செல்லும். இதில் ஓய்வூதிய பிரச்சனையும் உள்ளடங்கியுள்ளதால் இது DOTயின் ஒப்புதலுக்கு செல்ல வேண்டி உள்ளது.
2. **ஊழியர்களுக்கு E1 ஊதிய விகிதத்தில் பதவி உயர்வு**:- நிறுவனத்தின் மனித வள திட்டத்தோடு இதனை இயக்குனர் குழு இணைத்திருந்த காரணத்தால் இந்த பிரச்சனை தேக்க நிலையில் வைக்கப்பட்டிருந்தது. CMDஉடன் நடைபெற்ற பேச்சு வார்த்தைக்கு பின் ஊழியர்களுக்கு E1 ஊதிய விகிதத்தில் பதவி உயர்வு தரும் பிரச்சனையை BSNLன் மனித வள திட்டத்தில் இருந்து பிரிக்கும் முன்மொழிவை இயக்குனர் குழுவின் கூட்டதிற்கு அனுப்ப நிர்வாகம் முடிவெடுத்துள்ளது. விரைவில் தீர்வு காண்பதற்கு BSNL ஊழியர் சங்கம் தொடர்ந்து நடவடிக்கை எடுக்கும்.
3. **விடுபட்ட கேடர்களுக்கு ஒரு கூடுதல் ஆண்டு ஊதிய உயர்வு தொகை:-** 01.01.2007 முதல் 07.05.2008 வரை பணியமர்த்தப்பட்டு ஊதிய இழப்பை ஈடுகட்ட TTAக்களுக்கு ஒரு கூடுதல் ஆண்டு ஊதிய உயர்வு தொகை வழங்கப்பட்டது. ஆனால் இதர கேடர்களுக்கு

அது வழங்கப்படவில்லை. BSNL ஊழியர் சங்கம் CMD உடன் விவாதித்த பின்னர் இந்த பிரச்சனையை தீர்வு காண நிர்வாகம் முடிவெடுத்துள்ளது. இந்த பிரச்சனை தீர்வு காண்பதன் மூலம் 01.01.2007லிருந்து 11.5 கோடி ரூபாய் செலவாகும். இதன் பின்னர் ஒவ்வொரு ஆண்டும் கூடுதலாக 1.35 கோடி ரூபாய்களும் செலவாகும். இதற்கான ஒப்புதலை நிதிப் பிரிவு வழங்கி விட்டதாகவும், இயக்குனர் குழுவின் ஒப்புதலுக்கு அனுப்ப இருப்பதாகவும் Sr.GM(Estt) தெரிவித்தார்.

4. **TT தேர்வு எழுத தேவையான 10ஆம் வகுப்பு கல்வி தகுதியில் தளர்வு:-** பத்தாம் வகுப்பு கல்வி தகுதி இல்லாத ஊழியர்கள் TT இலாகா தேர்வு எழுத வசதியாக, அதில் ஒருமுறை விலக்களிக்கப்பட வேண்டும் என BSNL ஊழியர் சங்கம் தொடர்ந்து வற்புறுத்தி வருகிறது. சமீப காலம் வரை இந்த கோரிக்கை ஏற்கப்படவில்லை. CMD உடன் BSNL ஊழியர் சங்கம் விவாதித்த பின்னர் இந்த கோரிக்கையை இயக்குனர் குழுவின் ஒப்புதலுக்கு அனுப்ப நிர்வாகம் முடிவு செய்துள்ளது. இதற்காக பத்தாம் வகுப்பு தகுதிபெற்ற, தகுதி இல்லாத ஊழியர்களின் விவரங்களையும், மாநில வாரியாக உள்ள காலிப்பணியிடங்கள் தொடர்பான விவரங்களையும் கோரி மாநில நிர்வாகங்களுக்கு கார்ப்பரேட் அலுவலகம் கடிதம் எழுதியுள்ளது. மாநில நிர்வாகங்களிடமிருந்து தகவல்களை விரைந்து பெற வேண்டும் என நமது தலைவர்கள் கோரிக்கை வைத்த போது Sr.GM(Estt) அதனை ஏற்றுக்கொண்டார்.

**JE LICE தேர்வு முடிவுகள் மறு பரிசீலனை:-** 28.01.2018 அன்று நடைபெற்ற JE இலாகா தேர்வு எழுதியவர்களுக்கு தளர்வளிக்க வேண்டும் என BSNL ஊழியர் சங்கம் தொடர்ந்து வற்புறுத்தி வருகின்றது. மொத்தமுள்ள 9185 காலிப்பணியிடங்களுக்கு நடைபெற்ற தேர்வில் 1800 தோழர்கள் தேர்வு எழுதியதில் 111 தோழர்கள் மட்டுமே வெற்றி பெற்றுள்ளனர் என்பதால் இந்த கோரிக்கையை நமது மத்திய சங்கம் எழுப்பியது. ஆன் லைன் மூலமாக தேர்வு நடைபெற்றதும், அதில் உயர்ந்த தரத்திலான கேள்விகள் இருந்ததாலும் ஒரு சில தோழர்களே வெற்றி பெற முடிந்துள்ளது. எனவே 2008ல் நடைபெற்ற DR TTA தேர்வில் கொடுக்கப்பட்ட தளர்வை போலவே இதிலும் வழங்க வேண்டும் என BSNL ஊழியர் சங்கம் கடுமையான முயற்சிகளை மேற்கொண்டது. இந்த பிரச்சனையும் CMD உடன் நடைபெற்ற பேச்சு வார்த்தையில் முக்கியத்துவம் கொடுத்து விவாதிக்கப்பட்டதால் இது தொடர்பாக பொருத்தமான நடவடிக்கைகளை மேற்கொள்வதாக CMD உறுதி அளித்தார். 31.07.2018 அன்று திருமிகு ஸ்மிதா லூத்ரா GM(Rectt) அவர்களோடு தோழர் P.அபிமன்யு GS BSNLEU, தோழர் சுவபன் சக்கரவர்த்தி Dy.GS மற்றும் தோழர் S.செல்லப்பா AGS ஆகியோர் சந்தித்த போது தளர்வு கொடுக்க வேண்டும் என்கிற BSNL ஊழியர் சங்கத்தின் கோரிக்கை நிர்வாகத்தால் சாதகமாக பரிசீலிக்கப்படும் என்றும் அதில் விரவில் ஒரு சாதகமான முடிவு எடுக்கப்படும் என்றும் GM(Rectt) தெரிவித்துள்ளார். BSNL ஊழியர் சங்கம் இந்த பிரச்சனையை தொடர்ந்து கையிலெடுத்து நடவடிக்கை மேற்கொள்ளும்.

வாழ்த்துக்களுடன்,

**தோழமையுள்ள,**

**(A.பாபுராதாகிருஷ்ணன்)**

**மாநிலச்செயலாளர்**